Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 742/2025 PW-6**

Name : மோகன்
Father / Husband name : முனுசாமி
Village : சிவகங்கை
Age : 56

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.04.2026

Accused 1 to 3 present. Defence counsel present. Witness identified by HC 1967 Selvam.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் சிப்காட் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 25.10.2024 ம் தேதி காலை 8 மணிக்கு வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது அ.சா.1 சரவணன் நிலையம் ஆஜராகிகொடுத்த கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 264/2024, U/s 296(b),118(1),351(3) BNS ன் படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 09.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் அய்யப்பன் மற்றும் மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்துள்ளார். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான சரவணன், தமிழ்செல்வன், பிரசாந்த், ஏழுமலை ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் சம்பவம் உண்மை என தெரிய எதிரியை கைது செய்ய தேடிவந்த நிலையில்

அன்றையதினம் பகல் 12 மணக்கு அகூர் பஸ் நிறுத்தம் அருகே நின்றிருந்த 3வது எதிரி விக்னேஷ் என்பவரை காரணம் கூறி கைது செய்து உறவினர்களுக்கு தெரிவித்து கைது நடைமுறைகளை முறையாக பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். சாட்சிகளின் விசாரணையின்போது எதிரிகள் விக்னேஷ் மற்றும் விஷால் ஆகியோர்கள் அ.சா.1 ஐ கைகளால் தடுத்தது தெரியவரவே சட்டப்பிரிவுகளை U/s 296(b),118(1),351(3) BNS @ U/s 296(b),118(1),351(3),127(2) BNS ன் அறிக்கை மூலம் மாற்றம் செய்தேன். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வழக்குகோப்பினை வைத்தேன். உதவி ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கையில் 2வது பக்கம் 16வது வரியில் சம்பவம் பிரசாந்த் வீட்டில் அருகே நடைபெற்றது என உள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சம்பவயிடம் யார் வீட்டின் அருகே போடப்பட்டுள்ளது என்றால் சரவணன் வீட்டின் அருகே குறியீடு செய்யப்பட்டுள்ளது, பிரசாந்த் மற்றும் சரவணன் அருகே அருகே உள்ளது. நான் சம்பயிடம் செல்லாமல் வரைபடம் தயார் செய்யாமல் எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 24.10.2024 அன்று இரவு 07.30 மணியளவில் இந்த வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளை அழைத்து விசாரித்திருந்தால் சம்பவயிடம் குறித்து தெரியவந்திருக்கும், அவ்வாறு நான் விசாரிக்கவில்லை, பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.